யாழ்ப்பாணம்

# ஸ்ரீமா திஸாநாயக்காவின் பாதுகாப்பு குறித்து

## ஐ. தே. க. கவலை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 18 இதழ் 273
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-11-1994

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் திருமதி ஸ்ரீமா திசாநாயக்காவின் தேர்தல் பிரசார வேலைகள் மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக கண்டி மாவட்ட எம். பி. சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இன்னும் மூன்று தினங்களில் முடிவுறும்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் திருமதி ஸ்ரீமா திசாநாயக்கா நேரடியாகக் கலந்து

(6-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற ஆட்சியில் சிறிமாவோ ஜனாதிபதி?

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட்டதும் சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவிக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க நியமிக்கப்படலாம். அரசியல் அனுபவம் வாய்ந்த அவரே இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர்.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் பாக்கிய சோதி சரவணமுத்து இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி

[6ம் பக்கம் பார்க்க]

## காமினியின் கொலையை அடுத்து

# விமானப்படைக்கு 'மிக்17' ரக போர் ஹெலிகளை வாங்க முடிவு!

## டாங்கிகள், விமானங்களுக்கும் நிதி ஒதுக்கீடு

[கொழும்பு]

காமினி திஸாநாயக்காவின் கொலையை அடுத்து விமானப்படையினரின் தேவைக்கென மிக் 17 ரக ரஷ்ய போர் ஹெலிகொப்டர்கள் மூன்று விரைவில் கொள்வனவு செய்யப்படுமென பாதுகாப்பு அமைச்சு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும் யுத்த விமானங்கள், டாங்கிகள் ஆகியவற்றைகொள்வனவு செய்வதற்கென 530 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைக் கொள்வனவு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளதாக ஏஜென்சி செய்திசள் தெரிவித்தன,

ஆனல் இது குறித்து எந்த வித தகவல்களையும் வெளியிட பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க விரும்பவில்லையென ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

(6-ம் பக்கம் பார்க்க)

## 'ஏ. ஜே. ரணசிங்கவின்' செல்வாக்கு அதிகரிப்பு

(கொழும்பு)

சுயேட்சையாகப் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளரான ஏ.ஜே. ரணசிங்காவின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ருபவாஹினி ரசிகர்கள் மத்தியில் இவரது செல்வாக்கு பெருமளவு அதிகரித்துள்ளதாம்.

ரூபவாஹினி மூலம் இவர் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரைகள் சுவாரஸ்யமாகவும், நகைச்சுவை கலந்ததாக

(2ம் பக்கம் பார்க்க)

கடந்த ஆட்சிக்காலத்தில்:

## நான்காவது மாடியில் நான் துன்புறுத்தப்பட்டேன்!

– பிரதமர் சந்திரிகா

[கொழும்பு]

கடந்த ஆட்சிக் காலத்தில் அமைதி பூர்வமான அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளைகளில் பொலிசாரால் நான்கண்மூடித்தனமாக தாக்கப்பட்டேன். நான்காவதுமாடியில் துன்புறுத்தப்பட்டேன். இவ்வாறு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி தேர்தல் பிரசார உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: எனது கணவர் எதுவித

(6-ம் பக்கம் பார்க்க)

மட்டுநகரில்

## இராணுவம் சுட்டதில் தமிழர் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் கடந்த 27ம் திகதி இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டார். 10 வீடுகளுக்குமேல் சேதம் ஏற்பட்டது.

வாகரையைச் சேர்ந்தநான்கு பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம் (40 வயது) என்பவரே மரணமடைந்தவராவர்.

ஆண்டான்குளம் குருவிக்கல் என்ற இடத்திலேயே இச்சம்

(6-ம் பக்கம் பார்க்க)

## காணமல் போனேர் கதையில் இலங்கைக்கு முதலிடம்

(கொழும்பு)

உலகிலேயே காணமல் போவோர் தொகையைப் பொறுத்தவரையில் இலங்கையே முன்னணி வகிக்கிறது என கொழும்பிலிருந்து வெளிவரும் ''கிறிஸ்ரியன் வேக்கர்'' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மனித உரிமை அமைப்பு ஒன்றின் ஆய்வுக்குழு இலங்கையில் மேலும் 1069 பேர்

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கடற்படை துப்பாக்கிச் சூடு இந்திய மீனவர் பலி!

நால்வர் காயம்!!

(சென்னை)

கச்சதீவு கடற்பகுதி அருகில் நேற்று முன்தினமிரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் ஒரு மீனவர் கொல்லப்பட்டார். நான்கு மீனவர்கள் காயமடைந்தனர்.

இராமநாதபுரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மேற்படி மீனவர்களின் படகையும், உடைமைகளையும் கடற்படை சேதப்படுத்தியுமுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சேது ராஜன் என்றமீனவரே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழக காவல்துறையினர் வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளனர். -ரி-இ

## வாக்காளர்க்கு லஞ்சம்வழங்க ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி

பொ. ச. ஐ. மு. குற்றச்சாட்டு!!

(கொழும்பு)

எதிர்வரும் 9ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது சகல வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்காளர்களுக்கு ஆயிரம் ரூபா வீதம் லஞ்சம் வழங்கி வாக்குகளைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி செய்து வருவதாக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக்குற்றச்சாட்டை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே, க. நிராகரித்துள்ளது.

வாக்களிப்பு நிலையமொன்றில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் 50

(6ம் பக்கம் பார்க்க)

### வரி விளம்பரம்

**இன்று வியாழமாற்றம்**

வாக்கியப்படி இன்றும், திருக்கணிதப்படி 11-11 94 இலும் வியாழன் மாற்ற மடைகின்றது. வியாழமாற்றம் ரூபா 10/-. எங்கும் கிடைக்கும். பாலாஜி புத்தக சாலே, யாழ்ப்பாணம், (சி 1297)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

**ஸ்கந்த ஷஷ்டி**

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகர விநாயக கோவிலில் ஸ்கந்தஷஷ்டி திருவிழா இன்று காலே 10 கணிக்குஆரம்பமாகி விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். தினசரி இத்தினம் கந்தபுராணப் படலம் பயனும் சொல்லப்படும். [154]

0 0

;கொழும்புத்துறை]

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி கோயில் கந்தசஷ்டி விழா இன்றுவெள்ளிக்கிழமை காலே 10 மணிக்கு விசேட பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெற்று 8 ம் திகதி மாலே சூரசங்காரத்துடன் நிறைவுபெறும்.

தினமும் நண்பகல் 12-40 மணிக்டி கந்தபுராண படலம் படித்து பயனும் எஸ். சிவசுப்பிரமணியத்தினுல் சொல்லப்படும். (154]

0 0 0

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியர் தேவஸ்தான ஸ்கந்த ஷஷ்டி மகோற்சவ பெருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது.

விழா நாட்களில் தினமும் இரவு 7 மணியளவில் திரு. குமாரசாமி ஐயா தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். ரி

# "மாணவர் ஆரம்பத்திலிருந்து தமிழை பிழையற கற்க வேண்டும்"

## —பேராசிரியர் சண்முகதாஸ்

[வட்டுக்கோட்டை]

நூற்ருண்டு விழாவினேக் கொண்டாடும் இக்கல்லூரியின் நிறுவனரான அம்பலவாண நாவலர் மாணவர்கள் தமிழ் மொழியைச் செவ்வனே கற்கவேண்டும் என்பதற்காக பலவிதமான சேவைகளேச் செய்தவர். இந்தியாவிலேயே இவருக்கு நாவலர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.''

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி நூற்ருண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு அம்பலவாண நாவல சுவாமி பற்றிய நிறுவுநர் உரை நிகழ்த்திய யாழ். பல்கலேக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினர்.

பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றும் போது,

''இன்றைய மாணவர்கள் எழுதும்போது எத்தனேயோ எழுத்துப் பிழைகள், வசனப் பிழைகளே விட்டு எழுதுகிருர்கள், பிழையாக எழுதும் போது கருத்துக்களே மாறி விடுகின்றன. மாணவர்கள் ஆரம்பத்திலிருந்தே தமிழை பிழையில்லாது கற்றுக் கொள்ள வேண்டும் ஆசிரியர்களும் இதுவிடயத்தில் கூடிய கவனமெடுப்பது அவசியமாகும். ஆரம்பத்திலேயே சரியாகப் படிக்காதவர்களே பல்கலேக் கழகத்திலும் எழுத்துப் பிழை விடுகிருர்கள்'" என்ருர்.

நூற்ருண்டு விழாச்சபைச் செயலாளர் திரு. நா. க' தங்கரத்தினம் நன்றியுரை வழங்கினர். (159-ரி]

### தமிழீழ நீதிமன்றில் அனுமதி பத்திரமின்றி விறகு ஏற்றியவருக்கு அபராதம்

(உடுவில்]

அனுமதிப்பத்திரமின்றி விறகு வெட்டி ஏற்றி சென்ற ஏழாலே வடக்கு வாசியொருவருக்கு சுன்ஞகம் மாவட்ட நீதிமன்றில் நீதியாளர் செ. மயூரன் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதப் பணம் செலுத்தத் தவறின் இருபது நாட்கள் சிறைத் தண்டனேக்கும் உத்தரவிட்டார்.

ஏழாலே வடக்கை சேர்ந்த ஒருவர் அனுமதி பத்திரம் எதுவுமின்றி வேம்பு, பூவரசு, மஞ்சவண்ஞ போன்ற மரங்களே விறகுக்காக உழவு இயந்திரத்தில் கொண்டு சென்ற போது சுன்ஞகம் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## சூழல் விழிப்புணர்ச்சி இன்று முக்கியமானதாகும்

[பருத்தித்துறை]

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பொருளாதார மேம்பாட்டிற்கும், மக்களின் சுபீட்ச வாழ்வுக்கும் முக்கிய நடவடிக்கைகளே மேற்கொண்டுவருகின்றது. இதில் சூழல் விழிப்புணர்ச்சி கொடிவாரமும் மரம் நாட்டு விழாவும் இன்று மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சி இணேப்பாளர் திரு. வளவன் புலோலி பொது நூலகத்தில் நடைபெற்ற சூழல் விழிப்புணர்வு கொடிவாரத்தையும் மரம் நாட்டு விழாவையும் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிலே தமிழர்புனர் வாழ்வுக்கழக வடமராட்சி இணேப்பாளர் திரு.ஆர். சிவச்செல்வம் மங்கள விளக்கேற்றிஞர். திரு. சு. திருச்செல்வம் தலேமை தாங்கிஞர்.

வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பீ. இராமநாதன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பருத்தித்துறை கோட்ட இணேப்பாளர் திரு. எஸ். சத்தியலிங்கம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (52-ரி)

## வீட்டின் கதவுகளே உடைத்து திருட்டு

[உடுவில்)

இரவு நேரத்தில் வீட்டுக்காரர் உறக்கத்தில் இருந்த போது வீட்டின் கதவுகளே உடைத்து உட்புகுந்த திருடர் பதினேயாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களே திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரத்திருட்டு இணுவில் மேற்கில் இடம் பெற்றுள்ளது,

வீட்டின் சொந்தக்காரர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் திருடர் கோஷ்டி வீட்டினுள் புகுந்து துவிச்சக்கர வண்டி, இரு வாஞெலிப் பெட்டிகள் உட்பட பல பெறுமதி வாய்ந்த பொருட்களே திருடி சென்றனராம்.

இணுவில் மேற்கை சேர்ந்த வீட்டு சொந்தக்காரரான ஆறுப்பிள்ளே திருநாவுக்கரசு இத்திருட்டு சப்பந்தமாக சுன்ஞகம் காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளார். ( 109[

ஆசிரியர்

## சம்பள அமைப்பு திட்டம் ஜனவரியில் அமுலாகும்

[கொழும்பு)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பள அமைப்புத்திட்டம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திஞல் சுமார் 2 லட்சம் ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

இதேவேளே ஆசிரியசேவை பற்றி வர்த்தமானியில் உத்தியோக பூர்வமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. 843 / 4 இலக்க முடைய இந்த வர்த்தமானி அறிவித்தலில் சம்பள விகிதம் தரம் வகுப்பு ஆகியன பற்றி விபரமாக கூறப்பட்டுள்ளது. (கே)

ஏ. ஜே. ரணசிங்க

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

வும் இருந்ததால் பெருமளவு ரூபவாஹினி ரசிகர்கள் இவர் பக்கம் சாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளேயில் ரூபவாஹினியின் விளம்பரதாரர்கள் தமது விளம்பரங்களே திரு. ரணசிங்கவின் தேர்தல் பிரசார உரைகளுக்கு முன்னர் அல்லது பின்னர் ஒலிபரப்பு செய்வதற்காக பெரும் போட்டிபோட்டு வருவதாக தகவல் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார், -இ

## புத்தளத்தில் இன்று சமாதான யாத்திரை

(புத்தளம்]

வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருக்கும் மக்கள் இன்று வெள்ளிக்கிழமை 'சமாதானப் பாத யாத்திரை'' ஒன்றை நடத்தவுள்ளனர்.

பொ. ச. முன்னணி அரசாங்கம் நாட்டில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலேநாட்ட எடுத்து வரும் முயற்சிகளுக்கு தமது ஆதரவை தெரிவிக்கும் முகமாக இடம் பெயர்ந்தவர்கள் இந்தசமாதான ஊர்வலத்தை நடத்தவுள்ளனர்.

190 முகாம்களில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இந்த சமாதான யாத்திரையில் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

## அரசுமீது ஐ. தே. க குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனுதிபதித் தேர்தலில் தமது வேட்பாளருக்கு அதிகளவு வாக்குகளேப் பெற்றுக்கொள்ளும் விதமாகவே பொதுசன ஐக்கிய முன்னணி அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலேகளேக் குறைத்து வருகிறது-

ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்வரும் ஜனுதிபதித் தேர்தலில் தமக்கு அதிகளவு வாக்குகளேப் பெற்றுக்கொள்ளும் விதமாக இருமுக்கிய கட்சிகளும் நடந்துகொள்வதாக ஒவ்வொன்றும் குற்றச் சாட்டி வருகின்றன என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். இ

## "தமிழர்களின் வாக்கு எனக்கு வேண்டாம்"

### பூமிபுத்திர கட்சி வேட்பாளர்

(கொழும்பு)

எனக்கு தமிழர்களின் வாக்குகள் வேண்டாம் சிங்களவர்கள் வாக்குகள் தந்தால் போதும் என்று பூமி புத்திர கட்சியின் ஜனுதிபதி வேட்பாளர் ரூபவாஹினியில்வழங்கிய தேர்தல் பிரசார உரையில் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவது, எனக்கு தொண்டமானின் வாக்குகள் வேண்டாம் எம். எச். எம், அஷ்ரப்பின் வாக்குகள் வேண்டாம் தொண்டமானும் சுற்றுலா அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையோ, ஐக்கிய தேசியக்கட்சியையோ மனதிற் கொள்ளாது எனக்கு வாக்களியுங்கள் என்ருர். -ம


# அறுபதாவது பிறந்த தின வாழ்த்து

04-11-1994



## திரு. வேலுப்பிள்ளே மகேஸ்வரன்

[அதிபர்]

[யா/கொற்ருவத்தை அ.மி.த.க. பாடசாலே]

நீண்ட கால ஆசிரியச் சேவை செய்துவிட்ட
மனநிறைவோடு ஒய்வு கண்டிருக்கிறீர்கள்.
ஆண்டு அறுபது நிறைவாகி இன்று
அறுபதாவது பிறந்தினம் காண்கின்றீர்கள்
ஆசிரியராக,அதிபராக, கல்விச்சேவை செய்தீர்கள்
இனி குடும்பத் தலேவஞக சமுதாயத் தொண்டஞக
இறைபணி அடியஞக, சேவை செய்ய
கிடைத்த காலமும் சிறப்பாகட்டும்!
பல் நலத்துடன் பல்லாண்டு வாழுங்கள்.

மகன்
ம. மகிழ்ராஜன்
[கல்வி உத்தியோகத்தர்]
[கரவெட்டி ப. தெ. வ. அ. கூ. சங்கம்]

வதிரி,
கரவெட்டி,

(சி)4480

# எண்ணைக் குதங்கள் வெடித்து தீப்பரவியதில் 250 பேர் பலி! எகிப்தில் சம்பவம்

(கெய்ரோ)

எகிப்தில் வெள்ளப்பெருக்கினால் ஒரு பாலம் இடிந்து எண்ணைக்குதங்கள் மீது விழுந்ததால் எண்ணைக்குதங்கள் வெடித்து தீ பரவியதில் 250க்கு மேற்பட்டோர்பலியாகினர்.

மழையுடன் கூடிய இடி முழக்கத்தினிடையே கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. எகிப்தின் தென்பகுதி நகரான டொரிங் கோவில் மழை நேரத்தில் இத்துயர சம்பவம் இடம் பெற்றதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே அகப்பட்டு மாண்டனர்.

எண்ணைக் குதங்களில் வெடித்த தீ நேற்றுமாலை வரை கொழுந்துவிட்டு எரிந்தது. அடைமழை காரணமாக பெருக்கெடுத்தோடும் வெள்ள நீரில் தீப்பற்றி எரியும் பெற்ரோலியம் அடித்துச் செல்லப்பட்டு 22 ஆயிரம் மக்கள் வசிக்கும் பக்கத்திலுள்ள நகருக்கும் தீ பரவியுள்ளது. நகர மக்கள் பள்ளிகளிலும் அரச அலுவலகங்களிலும் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு அமர்த்தப்பட்டுள்ளனர்.

சுமார் 50 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. இடிபாடுகளுக்குள் இன்னும் பலர் சிக்கியுள்ளனர். அதிர்ச்சியினாலும் பயத்தினாலும் பலர் மரணமாகினர் தீக்காயங்களினாலும்நீரில் மூழ்கியும் இடிபாடுகளுக்குள் அகப்பட்டும் பலர் படுகாயமடைந்துள்ளனர். அநேகமாக குழந்தைகளும் பெண்களும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெய்ரோவில் கடுமையான புயலும் வீசுகிறது. மின்சார கோளாறு ஏற்பட்டு பல கடைகளும் எரிந்துள்ளன.

எகிப்தின் பல பாகங்களிலும் இன்னும் கடும் மழை பெய்கிறது. அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு மீட்பு வேலைகள் படையினராலும் தொண்டர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

மக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் இப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடெதுவுமின்றி படையினருக்கு தேவையான எண்ணைக்குதங்களைஏன் களஞ்சியப்படுத்தப்பட்டதென் பது பற்றியும் விசாரணைகள் நடைபெறுகின்றன. (கே-ரி(

## வாழைப்பழம் விலை வீழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ் குடா நாட்டில் . இப்பொழுது வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இப்பொழுது ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 8 ரூபாவிலிருந்து 10 ரூபா வரையும் இதரைப்பழம் ஒரு கிலோ 20 ரூபாவிலிருந்து 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. —162

## வெளிச்சம் வெளிவருகின்றது

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் ஐப்பசி மாத இதழ் கவிதைச் சிறப்பிதழாக நாளை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் சிந்திக்கத்தூண்டும் சில குறிப்புகளும், கவிஞர் சோ. பத்மநாதனுடனான நேர்காணலும் இடம்பெறுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணச் சமூக அமைப்புப் பற்றியும் அதனுடன் இணைந்த சீதனமுறையை பற்றியும் 'அடேல் ஆன்' எழுதிய 'உடையாத விலங்குகள்',

தமிழ்த்தாய் பதிப்பகவெளியீடான 51 கவிஞர்களின்கவிதை தொகுதியான 'காலம் எழுதிய வரிகள்" ஆகிய நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளும், புதுவை இரத்தினதுரை, முருகையன், வீ பரந்தாமன், மு. வே. வாஞ்சிநாதன், ச. வே. பஞ்சாட்சரம், தில்லைச்சிவன், தா. இராமலிங்கம், இளையவன், செ. பொ. சிவனேஸ், விவேக், வவுனியா திலீபன், கருணாகரன், சபா ஜெயராசா, என் கிருஷ்ணசிங்கம், இயல்வாணன், உதயலட்சுமி, நாமகள், இளந்திரையன் இன்னும் தமிழீழத்தின் தலைசிறந்த கவிஞர்கள் மற்றும் இளங்கவிஞர்கள் ஆகியோரின் நெஞ்சில் நிலைத்து நிற்கும் 35 கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி இந்த இதழ் வெளிவருகின்றது. இது வெளிச்சத்தின் முப்பதாவது இதழ் என்பதும் குறிப்பிடத்தக்கது. -ரி

## புகைப்பட நிலையத்தில் 5 கமராக்கள் திருட்டு

(சுன்னாகம்)

மல்லாகத்தில் ஒரு புகைப்பட நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை கடைச் கூரைச் சீற்றினை உடைத்து உள்ளே இறங்கிய திருடர்கள் முப்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

விலை உயர்ந்த ஐந்து கமரா, ஸ்ருடியோ உபகரணங்கள் மற்றும் பணம் உட்பட களவாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக நிலைய உரிமையாளர் சுன்னாகம் காவல் துறையினரிடம் முறையிட்டுள்ளார். -165

## கசிப்பு காய்ச்சியோர் காவல் துறையினால் கைது

(உடுவில்)

உரும்பிராய், ஏழாலை, இணுவில் போன்ற இடங்களில் கசிப்புக் காய்ச்சுவோரின் தொகை அதிகரித்து வருகின்றது.

சுன்னாகம் காவல்துறையினரின் துரித நடவடிக்கைகளால் சிறிது காலம் ஓய்ந்திருந்த கசிப்பு உற்பத்தி மீண்டும் இப்பகுதிகளில் அதிகரித்து வருகின்றது.

கடந்த கிழமை சுன்னாகம் காவல்துறையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது பல கசிப்பு உற்பத்தியாளர்கள் வசமாக சிக்கிக் கொண்டனர்.

காவல்துறையினரின் தேடுதல் வேட்டையின் போது உரும்பராயில் உள்ள ஒரு வீட்டில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடாக் கலவை ஐம்பத்தி நான்கு போத்தல்களும், காய்ச்சிய கசிப்பு ஐந்தரை போத்தல்களும் காவல்துறையினரிடம் சிக்கிக் கொண்டன.

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், தளபாடங்களுடன் உற்பத்தியில் ஈடுபட்ட நபரையும் காவல்துறையினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இதேபோன்று கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வேறு சிலரும் கசிப்புடன் ஏழாலை, உடுவில் சத்தியபுரம், இணுவில் போன்ற இடங்களில் காவல்துறையின் தேடுதலின்போது சிக்கிக் கொண்டனராம். -109

## நாய்களுக்கு 'விசர் நோய் தடுப்பூசி போட ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

சங்கானை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய்த்தடுப்பு ஊசி மருந்து இவ்வாரம் தொடக்கம் போடப்பட்டு வருகின்றது.

நாளை 5ம் திகதி சங்கானை அரசினர் வைத்தியசாலையிலும், 7-ம் திகதியன்று பண்ணாகம் மாதர் சங்க கட்டிடத்திலும், அதனைத் தொடர்ந்து நண்பகலில் சித்தன்கேணியிலுள்ள பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையிலும், 9-ம் திகதியன்று பனிப்புலம் உபதபால் அலுவலக கட்டடத்திலும், அதனைத் தொடர்ந்து காலையடி மறுமலர்ச்சி மன்ற கட்டிடத்திலும் நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசிபோடப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. -72

## இனப் பிரச்னையை அரசியல் ரீதியிலே தீர்க்க முடியும்

(கொழும்பு)

''இலங்கையின் இனப்பிரச்னையை அரசியல் ரீதியிலேயே தீர்க்க முடியும். இராணுவ ரீதியில் ஒருபோதும் தீர்க்க முடியாதென ஜனாதிபதி வேட்பாளராக இருந்து வாபஸ் பெற்ற ஜே. வி, பி. உறுப்பினர் நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்: இன்று நிலவும் பிரச்னைக்கு முதலாளித்துவ சக்திகளே காரணமாகும். மேலும் நிறைவேற்று முறை கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இப்பிரச்னையை மேலும் தீவிரப் படுத்தியது என்றார். க-ரி

ஜனநாயக முறைக்கு

## எதிரானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

ஜனநாயகமுறைக்கு மாறாக நடந்துகொண்ட சகலருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப் படுமென்று பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: ஜனநாயக முறையின்கீழ் ஒரு தனிநபர் அல்லது ஸ்தாபனம், அரசாங்கம் செய்யும் எந்த ஒரு செயலினதும் பின்விளைவுகள் உண்டு என்றும் கூறினார்.

அதிகார துஷ்பிரயோகம், ஊழல், லஞ்சம், கொலைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாராளுமன்ற அங்கத்தவர்கள், அமைச்சர்கள் ஆகியோர் ஜனநாயக அரசாங்கம் ஒன்றின்கீழ் பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். [ரி)

## "படுகொலை அரசியலை ஒழித்து அமைதி ஏற்படுத்துவோம்"

— சந்திரிகா உரை

[கேகாலை]

படுகொலை அரசியலை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்டி மக்கள் சமாதானமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதே தற்போதைய அரசின் நோக்கம் என்று பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன் தினம்மாலை ஜனாதிபதிதேர்தல் பிரசாரத்தின்போது பேசிய அவர், பொதுசன ஐக்கியமுன்னணி அரசு கடந்த பொதுத் தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி மக்களின் பிரச்னைகள் பல தீர்க்கப்பட்டுள்ளன என்றுகூறினார்.

அமைச்சர்களின் தொகை குறைக்கப்பட்டதனால் மீதப் படுத்தப்படும் 500 கோடிரூபா மக்கள் நல சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டை எதிர்நோக்கும் பல பிரச்னைகளை தீர்த்து வைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மைபலம் எமக்குதேவை. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தனக்கு அமோக ஆதரவு தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். —கே-ரி

## சந்திரிகாவுக்கு ஆதரவு; ஐ தொ. கா. முடிவு

(கொழும்பு)

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவிற்கு முழு ஆதரவு வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

ஜ. தொ. காங்கிரஸ் தலவாக்கொலையில் நடத்திய வருடாந்த பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது. இதன் தலைவர் வி. பி. கணேசன் கொழும்பில் நிருபர்கள் மாநாட்டில் இதுபற்றி தெரிவிக்கையில்; நாடு எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கப் படுமென்ற காரணத்தினால் தோட்டத்தொழிலாளர்களின் ஆதரவு இப்பொழுது வழங்கப்படுவதாகக் கூறினார்.

இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம்தான் அரசியல் தீர்வைக்காண முடியும் என்று அவர் வலியுறுத்தினார். அரசாங்கத்தின் பயனுள்ள திட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பை வழங்குவார் என திரு. கணேசன் நம்பிக்கை தெரிவித்தார். கே சி

யாழ்- மாநகர சபை எல்லைக்குள்

## வீட்டு மின் இணைப்புகளை சீர் செய்ய கோரிக்கை

[கொழும்புத்துறை]

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்தவர்கள் தமது வீதிகளின் மின் இணைப்புக்களை சீர்செய்து சரிபார்த்து வைத்திருக்குமாறு யாழ். மாநகர மின் பொறியியலாளரும் பதில் ஆணையாளருமான திரு. வே. நவரத்தினராசா மக்களைக் கேட்டுள்ளார்.

நீண்ட பலகாலமாக மின் விநியோகம் துண்டிக்கப் பட்டிருப்பதால் வீட்டு மின் இணைப்புகள் கவனிப்பு இன்றி பழுதடைந்த நிலையில் இருக்கலாம் என்றும் எனவே மக்கள் அதனைச் சீர் செய்து கொள்வது நல்லது என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். குடா நாட்டுக்கு சுழற்சி முறையில் மின் வழங்கமின்சார சபையினர் திட்டமிட்டு வருகின்றனர் என்றும் இதன் மூலம் கால விரயத்தையும் வீண் உயிர் ஆபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மாநகரசபைப் பகுதியில் வீதிகளில் உள்ள மின் கம்பிகள் செடி கொடிகளாலும் மரங்களாலும் மூடிக் கிடக்கின்றன. என்றும் எனவே அவற்றை அகற்றி மின்கம்பிகளைச் சீர் செய்வதற்கு உதவிடுமாறு மின் பொறியிலாளர் திரு. வே. நவரத்தினராசா யாழ். மாநகரப் பகுதி வாழ் மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பொது மக்கள் இதனைத் தத்தமது பகுதிகளில் சீர் செய்வது நல்ல செயலாகும் என அவர் கூறிவுள்ளார்.

[154]

# தமிழீழ மாவீரர் நாள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும்

(அரியாலை)

இம் மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவீரர் நாள் தமிழீழமெங்கும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது அதற்கான ஆயத்தங்களை தமிழீழ மக்கள் செய்து வருகின்றனர்.

இதேபோன்று வன்னி-முல்லை, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் அவ்வப்பகுதி பொது அமைப்புகளால் விரிவான முறையில் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

தமிழீழ மாவீரர் வாரம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 27-ந் திகதி ஞாயிற்றுகிழமையுடன் நிறைவுபெறும்,

கடந்த வருடத்தைபோல வீதிகள் தோறும் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டுசிவப்பு மஞ்சள் வர்ணக்கொடிகள் பறக்கவிடப்படும் மாவீரர் நினைவாக பயன்தரும் மரங்கள் நடுகையும் ஆங்காங்கே இடம்பெறும் இதற்கான ஆயத்தங்கள் யாழ். மாவட்ட பொது அமைப்புகள் தலைமை தாங்கவுள்ளன சிரமதான நிகழ்வுகளும் தமிழீழ மாவீரத் தினத்தையொட்டி நடபெறவுள்ளது. -59-ரி

## மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு தலா 4 லீற்றர் மண்ணெண்ணையை சங்க கிளைகள் ஊடாக லீற்றர் 20 ரூபா விலையில் விநியோகம் செய்து வருகின்றது. இவ்வாரம் தொடக்கம் இந்த விநியோகம் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. -91

## சிமெந்து தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

[கொழும்பு]

நாட்டில் தற்போது நிலவும் சிமெந்துத் தட்டுப்பாடுஅடுத்த வாரம் முதல் நீங்கிவிடுமென்று அரசு நேற்று அறிவித்தது.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 16 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்து தற்போது கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துவிட்டது. இந்தச் சிமெந்து அடுத்தவாரம் முதல் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

அடுத்த வாரம் மேலும் 14 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்து கொழும்பு வந்ததும் சிமெந்தின் விலையிலும் மாற்றம் செய்யப்படும்.

இதேவேளை காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு வேண்டியஆலோசனைகளை வழங்குவதற்காக காங்கேசன்துறைக்கு சென்ற பொறியியலாளர் குழு தமது அறிக்கையை அரசிடம் தற்போது சமர்ப்பித்துள்ளது. —வி-ரி

## சீமெந்து பெற்றுத்தர ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்க உறுப்பினர்களுக்கு சகாய விலையில் சீமெந்தை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மல சல கூடம் அமைக்கவும், கிணறு கட்டவும், சீமெந்து தேவைப்படும் சங்க உறுப்பினர்கள் தங்கள் கிளைக் குழுத்தலைவரின் சிபார்சுளின் சங்கத் தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இதுபற்றி சங்கப் பொது முகாமையாளர் சகல சங்கக் கிளைகளுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளார். (72)

## மலேரியா தடுப்பு நடவடிக்கை

(உடுவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மலேரியா நோய்பரவாது தடுக்கும்முகமாக மலேரியா நுளம்பு இடங்களை இனங்கண்டு நுளம்புகளை இல்லாதொழிப்பதற்கு பொது சுகாதார வெளிக்கள உதவியாளர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நுளம்புகளினால் மலேரியா நோய் பரவும் அறிகுறிகள் தென்படுவதனால் வடபிராந்திய சுகாதார திணைக்களத் மலேரியா தடுப்புப்பகுதியினர் மலேரியா நுளம்புகளை கண்டுபிடித்து அழிக்கும் பயிற்சியினை வழங்கிவருகின்றனர்.

## மாணவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக இந்துக் கல்லூரி நிலையத்தைச் சேர்ந்த பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா நெறியின் இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களை நாளை 5ம் திகதி காலை 9-30 மணிக்கு நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. விஸ்வநாதன் கேட்டுக்கொள்கின்றார்.

மருந்து கலவையாளர்

## பரீட்சையை யாழ். நகரில் நடத்த கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''மருந்துக் கலவையாளர்களுக்கு வருடந்தோறும் நடாத்தப்படும் வினைத் திறமை காண் தடைப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்தவேண்டும். கொழும்பில் இப்பரீட்சையை நடாத்துவதனால் பெரும் கஷ்டங்களை இவர்கள் எதிர்நோக்கவேண்டியுள்ளது.',

இவ்வாறு சுகாதார அமைச்சைக் கோரும் தீர்மானம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். நகரில் நடைபெற்ற அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளையின் 21-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளைத் தலைவர் திரு. சி, திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஓய்வுபெற்ற சுகாதாரதிணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ், ஞானரத்தினத்திற்கு சேவை நலன் பாராட்டு வைபவமும், புதிய நிர்வாக அதிகாரி செ. மகேந்திரனுக்கு வரவேற்பு வைபவமும் நடாத்தப்பட்டது.

புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக திரு. சி. திருநாவுக்கரசுவும், செயலாளராக திரு. என். எம். கந்தசாமியும், பொருளாளராக திரு. ஐ. அருளானந்தமும் ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டனர். (72)

## இந்திய அணியிலிருந்து நீக்கம்

(புதுடில்லி)

புதுடில்லியிலும் கல்கத்தாவிலும் நடைபெறவுள்ளமூன்று நாடுகளுக்கிடையேயான ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி தொடரில் கலந்துகொள்வதற்கு இந்திய அணி வீரர்களான மஞ்ஜேப்பிரபாகர், மற்றும் நயன் மொங்கியா ஆகியோருக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் ஜக்மோகன்டால்மியா தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு பதிலாக ராகுல்கிராவிட், விஜய்யாதவ் ஆகியோர் இந்திய அணியில் இடம் பெறுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -க.சி

## மழையினால் அகதிகள் பாதிப்பு

(அரியாலை)

அரியாலை மணியரசன் குடியிருப்பிலுள்ள திவக அகதிகள் மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்,

ஓலைக் குடிசைகள் மிகவும் பழையனவாக இருப்பதால் மழைக்குத் தாக்குப்பிடிக்காது ஒழுக்குகள் விழுந்து வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது.

யாழ். பிரதான வீதி, வண்ணை வீதி ஆகிய இடங்களிலுள்ள இடிந்த கட்டிடங்களில் வாழும் அகதிகளும் மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (59)

யாழ் நகரில்

## மின் இணைப்பு சீராக்கும் வேலைகள் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியினர், மின்சார சபைபகுதியினர் கூட்டாக இணைந்து நகரபகுதியிலுள்ள வீதிகள், ஒழுங்கைகளில் உள்ள மின் இணைப்புகளைச் சீராக்கும் பணியில் ஈடுபட்டு செயல்பட்டு வருகிறார்கள்.

வீதிகளில் அறுந்து தொங்கும் மின்கம்பிகளை இணைத்தும் புதிய கம்பிகளைப் பொருத்தியும் மரம் செடிகளை வெட்டியும் துப்பரவு செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ். மின்சாரசபை பகுதியினர், மின்இணைப்புக்களையும் வீதிகள், ஒழுங்கைப் பகுதிகளுக்கு நேரில் சென்று கணிப்பீடு செய்து வருகின்றனர். - 154

யாழ். மாவட்ட

## பிரதேசசெயலகபிரிவுகளில் 86பாலர் கல்வி நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட நிலையம் யாழ், மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் பாலர் கல்வி நிலையங்களை அமைத்து நடாத்தி வருகின்றனர்.

பாலர் கல்வித்திட்டத்தின் கீழ் மூன்று வயது தொடக்கம் வரையான குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு ஆரம்பக் கல்வி போதிக்கப்பட்டு வருவதாக இத் திட்டத்துக்கு பொறுப்பாகச் செயலாற்றிவரும் செல்வி கா. திலகராணி செரிவித்தார்.

பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரதேசச் செயலர் பிரிவுகளில் மொத்தம் 86 பாலர் கல்விநிலையங்கள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இக் கல்வி நிலையங்களில் 117 ஆசிரியர்கள் சேவையாற்றி வருகிறார்கள். 2815 குழந்தைகள் இப்பாடசாலைகளில் தமது ஆரம்பக் கல்வியைப் பயின்று வருகிறார்கள். -162

## குடாநாட்டில் மாவுக்கு தொடர்ந்து 'தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாவுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருகிறது. திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் மா எடுத்துவருவதற்குத் தாமதம் ஏற்பட்டிருப்பதாலேயே குடா நாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மா தட்டுப்பாட்டை தொடர்ந்து பாணுக்கும் தட்டுப்பாடு நிலவிவருகிறது. பேக்கரிகளில் தினமும் மக்கள் பாண் பெறுவதற்காக வெகுநேரம் காத்து நிற்பதைக்காணக்கூடியதாக உள்ளது. மா தட்டுப்பாடு காரணமாக பேக்கரி உரிமையாளர்கள்பாண் உற்பத்தியை மட்டுப்படுத்தியுள்ளது தெரிந்ததே, -162

## காமினிமரணத்தினால்ஐ.தே.க பல அணிகளாகபிளவுறுகிறது

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் கொலையானது ஐ.தே. கட்சியை மேலும் பல்வேறு அணிகளாக பிளவுபடுத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; கொள்கை வகுப்பதிலும், ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதிலும் எதிர்வரும் தேர்தல்களில் பிரச்சாரத்தை மேற்கொள்வதிலும் தலைமைத்துவத்தை யார் வகிப்பது என்பதிலும் பலத்த போட்டிகள் ஏற்பட்டுள்ளதாகவும் இப்போட்டிகள் ஐ. தே. கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. க-ரி

ஒரு அனுமதிப் பத்திரம் மூலம்

## இருமுறை விறகு ஏற்ற முயன்றவர் மீது விசாரணை

[உடுவில்]

ஒரு லோட் விறகு ஏற்றிச் செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு இரண்டாம் முறையும் விறகு ஏற்றிச்செல்லமுயன்றவரை உழவு இயந்திரம்விறகுஆகியவற்றை சுன்னாகம் காவல் துறையினர் தடுத்து விசாரணைகளுக்காக காவல் பணிமனைக்கு கூட்டிச் சென்றனர். இச்சம்பவம் கந்தரோடைக் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

கந்தரோடையில் இருந்து மாமர விறகு ஏற்றி செல்வதற்குஒரு லோட்டுக்கு எனக் கூறி மாமரடிவிறகு ஏற்றி பறித்தபின் அதே உத்தரவு பத்திரத்தை பயன்படுத்தி மீண்டும் ஒரு முறை விறகினை ஏற்றி செல்லும் போதே காவல் துறையினரிடம் சிக்குக்கொண்டார்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக விறகினை தடுத்து வைத்துள்ளனர். -109

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 5-ம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். -154

## கிராம சேவகர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு. எஸ். வசந்தகுமார் குரும்பசிட்டி கிழக்குப்பகுதிக்த கிராமசேவை உத்தியோகத்தராக கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிதாக நியமனம் பெற்றுள்ளார். —162

### மணிவாக்கு

தொலை நோக்கும் செயல் திறனும் வெற்றிக்குப் படிகளாகும்.

- அரிஸ்டாடில்

## நமது நோக்கு

### அறிவுச் சோலை!

பாடத்திறன் மாத்திரமல்ல, மாணுக்கரின் எதிர்கால உயர்வு வாழ்வுபற்றிய இலட்சியப்பற்றோடு ஆசிரியர் வகுப்புக்குள் நுழைகிறார்; அரிச்சந்திரன் கதையைக் கூறுகிறார்; ஆவலோடு கேட்கிறார்கள் மாணுக்கர்கள்!

கதை முடிந்ததும் ஒரு மாணவனை எழுப்புகிறார்; ''அரிச்சந்திரன்பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்ற கேள்வியைக் கேட்கிறார்.

''முதலிலேயே ஒரு பொய் சொல்லியிருந்தால், இப்படிக் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை!'' - பதட்டமில்லாமல் வருகிறது பதில்!

அண்மையில் - தமிழகத்திலிருந்து வெளிவந்த ஒரு பிரபல சஞ்சிகையிற காணப்பட்ட துணுக்கு இது.

வெறும் நகைச்சுவைக்காக வெளியிடப்பட்ட துணுக்கு. ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால், தற்காலச் சந்ததியினரின் மனப்போக்கும், அடிப்படை அறங்கள், விழுமியங்கள் எப்படியெல்லாம் செல்லாக் காசாகி வருகின்றன என்பது வெளிச்சமாகிறது,

இந்தப் பின்னணியில் - காந்தரூபன் அறிவுச் சோலையின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி, தேசியத் தலைவர் பிரபா வெளியிட்ட வாழ்த்தின் அருமை பெருமை தெரிகிறது. காலத்தின் தேவை அறிந்து வெளியிட்ட கருத்தாகப் பளிச்சிடுகிறது!

தமிழீழச் சிறார்கள் சிறந்த முழு மனிதர்களாக மலர வேண்டும் என்ற தலைவரது உயர் இலட்சியத்தைப் பெற்றோரும் ஆசிரியர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏனெனில் - மேற்கு நாடுகளில் அடிப்படை அறங்கள் மறக்கப்பட்டு, திரிபடைந்து, நாகரிகம் என்ற பெயரால் எப்படியும் வாழலாம் என்ற மனப் போக்கு வேகமாக வளர்ந்து வருகின்றது.

பொய் சொல்லக் கூடாது என்பதற்காக அரிச்சந்திரன் செய்த தியாகம் ஏளனத்திற்குரியதாகக் கணிக்கப்படலாமா?

மேலைநாடுகளிலிருந்து பரவும் அறவிரோதப் பண்புகளால்தான் இந்த நிலை வருகிறதா?

அந்தப் போக்கு - அறத்தையே கேலி செய்யும் பண்பு - இங்கு பரவுவது தடுக்கப்பட வேண்டும்!

''முழுமை எனும்போது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகிறேன்!'' எனத் தலைவர் அழுத்திக் குறிப்பிடுவது வரவேற்கத்தக்க அறிவுரை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

# ''தமிழீழ மாவீரரின் தியாகம் என்றும் நினைவுகூர வேண்டும்''

[உடுவில்]

''உலகில் தமிழினம் எங்கே வாழ்கின்றது என்ற கேள்விக்கு இலங்கையில் உள்ள சிறுபான்மை இன மக்களே தமிழ் மக்கள் என்பதை சர்வதேச அரங்கிற்கு எடுத்துக்காட்டியவர்கள் விடுதலைப் போரில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்கள். உலக அரங்கில் நாம்தான் தமிழினம் என நிரூபித்தவர்களை தமிழினம் வாழும் வரை நினைவுகூர வேண்டும்,''

மாவீரர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, தமிழீழ மக்களால் இத்தினம் ஏன் கொண்டாடப்படுகின்றது என்பதை விளக்கிக் கூறிய விடுதலைப் புலிகள் நடுவகப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் உடுவில் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

திரு. அரசண்ணா கூறியதாவது; இந்தியாவில் தமிழ் நாட்டில் ஏழரைக் கோடி தமிழ்மக்கள் வாழ்கின்றபோதிலும் 35 லட்சம் வரையான தமிழ் மக்கள் வாழும் இலங்கையில்தான் தமிழினம் உண்டு என்பதை தமது விடுதலைப் போரினால் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டியவர்கள் தமிழீழ போராளிகள். விடுதலைப் போரில் தம்மை ஆகுதி ஆக்கிக் கொண்ட 6481 வீரவேங்கைகளும் சாதித்தது என்ன? ஒன்று எதிரிக்கு எதிரானஇராணுவ நடவடிக்கையில் பாரிய வெற்றியீட்டியது. மற்றையது சர்வதேச ரீதியில் போராட்டத்தை வெகுஜன நடவடிக்கையாக முன்னெடுத்தமை.

வெகுஜன நடவடிக்கைளின் ஊடாக எமது போராட்ட உணர்வுகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சாதனைகளைப் புரிந்த மாவீரர்களை நாம் நினைவுகூர வேண்டும்,

தன்னாட்சிமிக்க தேசிய இனமாக நாம் விளங்கவேண்டுமானால் எமக்கென்ற வரையறுக்கப்பட்ட நிலம் வேண்டும். எமக்கென தனித்துவம்உடைய கலை பண்பாடு வேண்டும். ஸ்திரமான பொருளாதார பலம் வேண்டும். நீண்ட காலமாக வாழ்ந்துவரும் வரலாறு இருக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் கொண்ட நாம் தன்னாட்சியுடைய தேசிய இனமாக சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட வேண்டிப் போராடுகின்றோம்.

வெகுஜன ரீதியாக எதிர்காலத்திலும் மக்களின் பங்களிப்பு குறையக்கூடாது.

மாவீரர்களின் தியாகம் தமிழினம் உள்ளவரை நினைவுகூரப்பட வேண்டும்.

—109-ரி

## பலதும் பத்தும்

### தூக்கமின்மை

தூக்கமின்மை ஒருநோய்! ஆனால் இதனைத் தூக்க மாத்திரைகளாற் போக்கி விடலாம் எனத் தீர்மானிக்காதீர்கள்!

நித்திரைக்குப் போகு முன் உண்ணும் உணவு இலேசானதாக இருக்க வேண்டும், கடின உணவு தூக்கத்தின் எதிரி.

இதேவேளை எதுவும் சாப்பிடாமல் வெறும் வயிற்றுடன் ...... பட்டினியாகவும் படுத்துவிடக்கூடாது. காப்பி, தேநீர்...? வேண்டாம்; பாலில் சிறிதளவு தேன் விட்டு அருந்தினால் தூக்கம் தானாகவே வரும்.

உடலையும், உள்ளத்தையும் நிம்மதியாக வைத்துக கொண்டு தான் நித்திரைக்குப் போகவேண்டும் ..... பிரார்த்தனை நல்ல மருந்து!

பகலில் தூங்குவது ......? ஆரோக்கியத்திற்கு கேடு மாத்திரமல்ல; இரவின் இயற்கைத் தூக்கத்திற்கும் எதிரியாம்!

—மயூரன்

## இராசி பலன்

04 - 11 - 1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-18)

பிரதமை பி. ப. 5-40 வரை. விசாகம் இரவு 11-33 வரை, மரணயோகம் இராகு காலம் காலை 10-34 முதல் 12-04 வரை: சுபநேரம் காலை 6-04 முதல் 7-34 வரை.

மேடம்: நாணயக் குறைவு, தடுமாற்றம், உடல் உபாதை

இடபம்: சுபகாரிய செலவு, தொழில் சிறப்பு, மகிழ்ச்சி.

மிதுனம்: பொதுசனப் பாராட்டு, தாயார் உதவி, பயணம்

கடகம்: ஏமாற்றப்படல், பணியாளர் வன்மம், அலைச்சல்

சிங்கம்: தகாத செயல், பணமுடை, அயலார் வெறுப்பு.

கன்னி: விகடப் பேச்சு, விருந்துண்ணல், பதவி மாற்றம்

துலாம்: எதிர்பாராத துயர், அமைதியின்மை, வைத்தியச் செலவு

விருச்சிகம்: இனிய சம்பாஷணை, மாதர் உதவி, திருமணச் சிறப்பு

தனுசு: முரண்பாடு, வீண் அச்சம், கடன்படல்

மகரம்: மன வேதனை, தொழில் லாபம், காரிய சித்தி

கும்பம்: உறவினர் சகாயம கலைப்பணி, பெரியோர் ஆசி,

மீனம்: வீண் சங்கடம், குடும்ப பிணக்கு, யோசனை

—ஜோஸ்யர்

## வெள்ளி விருந்து

# அறிவால் அறியலாமா?

இறைவன் அறிவு வடிவானவர் அறிவே வடிவான ஆண்டவனை அறிவு என்ற ஒன்றினாலேயே அறிதல் வேண்டும். ஆனால் நூலறிவு அன்று. அநுபவத்தால் உண்டான மெய்யுணர்வு திருவள்ளுவர் மெய்யுணர்வு என்ற அதிகாரத்தால் இதனை உணர்த்துகிறார்.

வாழை நாரால் மலர் தொடுக்கலாம்; மதயானையைக் கட்ட முடியாது ஏணி வைத்து மாடி மீது ஏறலாம்; ஆனால் இமயத்தின் உச்சிக்கு ஏறமுடியாது. படியினால் நெய்யை அளக்கலாம்; கடல் நீரை அளவிடமுடியாது. அதுபோல நாலறிவினால் பிறபொருள்களை அறியலாம்; இறைவனை அடைய முடியாது.

''வாசித்துக் காணாது'' என்பார் அருணகிரிநாதர் எனவே இறைவனை அநுபவ அறிவால் அறிய முயல்வதே அறிவுடமை

''அறிவாலறிந்து உன்
இருதாள் இறைஞ்சும்
அடியார் இடைஞ்சல்
களைவோனே!

என்பது அருணகிரிநாதரது அமுத வாக்கு!

— திருமுருககிருபானந்த வாரியார்

# வெற்றிடங்கள் பற்றிய விபரம் சேகரிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ் பிராந்திய சுகாதாரப் பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள சிகிச்சை நிறுவனங்களிலும்நீண்டகாலமாக வெற்றிடமாக நிரப்பப்படாதிருக்கும் வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் பற்றிய விபரங்களை கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு, யாழ். சுகாதாரத் திணைக்களத்திடமிருந்து கோரியுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாருக்கு ஊடாக அண்மை இவ் அறிவித்தல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் பற்றிய மதிப்பீடுகளை சேகரித்து யாழ் சுகாதாரத் திணைக்களம் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

72

## நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரையிட ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினரால் இன்று வெள்ளிக்கிழமை அச்சுவேலி பிரதேசசபை உபஅலுவலகத்தில் அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1,30 மணி வரையும் நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளலாமென யாழ் செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு. வை. கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலிப் பொதுச்சந்தையில் பலர் இதுவரை முத்திரையிடப்படாது தராசுப்படிகள் வைத்திருப்பதாக திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் இதுகாலவரை முத்திரையிடத் தவறியவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தத்தமது நிறுவைகள் - அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார். சகல மில் உரிமையாளர்களும் இதனை நடைமுறைப்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட பகுதிகளில் நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிளத்தவறுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

(154)

## சாலை ஓரம் — கற்பகச் சோலை செய்வோம்

### மரம் நாட்டு விழா

[பண்டத்தரிப்பு]

மரம் நாட்டு கொடி வாரத்தை முன்னிட்டு வலிமேற்கு பிரதேச செயலகத்தினால் சங்கானை அரசினர் வைத்திய சாலையில் மரம் நாட்டு வைபவம் பிரதேச செயலர் திரு.கா;சந்திரராசா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டது.

(72]

### பண்டேஜ் துணி தட்டுப்பாடு

[அரியாலை)

யாழ்.போதனா வைத்திய சாலையில்காயங்களுக்கு கட்டும் பண்டேஜ் துணிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு வரும் நோயாளர்களை துணி கொண்டு வருமாறு ஊழியர்கள் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

[59]

### பழ மர நடுகை

[கொழும்புத்துறை[

யாழ். இந்து மகளிர் கல்லூரி வளவில் கடந்த திங்கட்கிழமை காலை யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பயன்தரும் மா, பலா முதலிய பழமரக் கன்றுகளை நாட்டினார்.

[154]

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994–11-04 வெள்ளி இரவு**

08-01 கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''உலக உலா'' சஞ்சிகை. அதனை அடுத்து சிறுகதை - கை, கூர்வேலன் எழுதிய ''உயர்ந்த உள்ளம்'' சிறுகதையை தொடர்ந்து கவிதை - தூயவன் எழுதிய ''பசி தீர்கிறது'' தாகம் தணிகிறது''

08-25 கணப்பொழுது சி.கண்ணம்மா எழுதிய ''கப்டன் மலரவன்''

08-30 செய்திகள்

08-40 அரசியல் அரங்கம்

08-50 ைாத்திய கானங்கள்

09.00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994–11-05 சனி காலை**

07-02 மாவீர வணக்கம்

07-14 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## வரப்பெற்றோம்

### பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக்கச்சேரி

கவிஞர் அல்லை க, வ. ஆறுமுகம் அவர்களின் கவிதைத் தொகுப்பு எழுத்துத்துறையில் நீண்டகால அனுபவம்மிக்க இவரது அண்மைக்காலக் கவிதைகள் 45 இதில் அடங்கி உள்ளன.

உலகியலை நன்குணர்ந்து அப்படியே படம் பிடித்துக் காட்டுவதோடு இன்றைய போராட்டச் சிந்தனைகளையும் பதிவு செய்திருக்கிறார் அங்கதச்சுவை உட்படச்பல்சுவை விருந்தோடு படிப்பவர்களைச் சிந்திக்க வைத்திருக்கிறார்.

சமுதாயத்திலே சாபக்கேடான பல விஷயங்களை எளியநடையில் சாடியிருப்பது அவரது சமுதாய உணர்வினை வெளிக்காட்டுகிறது. போலிகளைக் குத்திக் காட்டுவதில் வெற்றிபெற்றுள்ளார் என்றே அவரது கவிதைகளை வாசிப்போருக்குத் தெரியவரும்,

- சிவா

# பாதுகாப்பு செலவுகளுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிக நிதியை ஒதுக்குவதென அரசு முடிவு செய்துள்ளது.

படையினரின் அதிகரித்த செலவுகளுக்காகவும், கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவுமே இந்த மேலதிக நிதியை ஒதுக்கவேண்டிய நிலைக்குக் காரணமென தெரிவிக்கப்பட்டது.

போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், பாதுகாப்பு படையினருக்கு சம்பளம் வழங்குவதற்குமான செலவு இந்த வருடம் 27 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்தசிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புச் செலவுகளுக்காக இப்போது 2550 கோடி ரூபாவை ஒதுக்கவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். -இ

2ம் கட்ட ஏலவிற்பனை:

# 50 பஜரோ வாகனங்கள் விரைவில் விற்பனை

[கொழும்பு]

முன்னாள் அமைச்சர்களும், ராஜாங்க அமைச்சர்களும் பாவித்த பஜரோ ஜீப்வண்டிகளும் 2ம் கட்ட ஏலவிற்பனையில் மிகவிரைவில் விற்பனை செய்யப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

2ம் கட்ட ஏலவிற்பனையில் 17 பென்ஸ் கார்களும் 50க்கும் மேற்பட்ட பஜரோ ஜீப் வண்டிகளும் ஏலத்தில் விற்கப்படவிருக்கின்றன. -வி-இ

சர்வதேச கிரிக்கெட்:

# இந்தியா - மே. இந்திய அணிகள் மோதுகின்றன

(புதுடில்லி)

இந்தியாவில் மூன்று நாடுகளுடையே நடைபெறும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை கல்கத்தாவில் நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் இந்தியா-மேற்குஇந்திய அணியை எதிர்த்து விளையாடும்,

இதேவேளையில் இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற போட்டியில் இந்தியா 107 அதிகப்படியானயான ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.

கப்டன் முகம்மது அஸாருதீன் 45 நிமிடங்களில் 58 ஓட்டங்களைப் பெற்று ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில்5000 ஓட்டங்களைப்பெற்ற முதலாவது இந்தியர் என்ற பெயரைப் பெற்றார்.

இப்போட்டியில் நியூஸிலாந்து 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. வி இ

# கொழும்பில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு கோட்டை கபூர் கட்டிடத்தில் உள்ள பாட்டா விற்பனை நிலையத்தில் நேற்றுக் காலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்புப் படையினரும் கடற்படையினரும் பொலிசாரும்மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் தீ அணைக்கப்பட்டது.

இத் தீ விபத்து சம்பந்தமான விசாரணைகள் இப்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, க இ


தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

| | |
|---|---|
| கல்வித் தகமைகள்: | 08ம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை |
| உயரம்: | 5' 6'' |
| வயது: | 18 தொடக்கம் 30 வரை |

மேற்கூறிய தகைமையுடையவர்கள் 1994-11-10ந் திகதி வரை பழைய பூங்காவில் உள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகம் தரவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

(எ-4479)



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 04-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.


வாக்காளர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேருக்குதலா ஆயிரம்ரூபாவை வழங்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக ஐ, தே. க மீது பொ, ச. மு. செயலர் டி. எம், ஜயரட்ண தெரிவித்த கருத்து உண்மைக்கு புறம்பானது என ஐ. தே. கவைச் சேர்ந்த திரு. சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (இ)

மட்டுநகரில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பவம் இடம்பெற்றது.

இதே வேளையில் காமினி திசநாயக்கா கொலையுண்ட பின்னர் அரச படையினர் தமது தாக்குதல் நடவடிக்கை கிழக்கு மாகாணத்தில் தீவிரப்படுத்தியுள்ளனர் என்பதும் தெரிந்ததே. -க-இ

கடந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றமும் செய்யாத நிலையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

குற்றவாளி என தீர்ப்பளிக்கட்ட ஒருவரைவிட மிகமோசமாக அவர் தாக்கப்படார்.

எனது கணவருக்கு உணவு கொண்டு செல்வதற்குக்கூட எனக்கு அனுமதி இருக்கவில்லை, அப்போது எனது மகனுக்கு மூன்றுமாதம்கூட அகவில்லை.

ஐ.தே.கட்சி ஆட்சியின் கொடூரங்களை நான் நேரில் அனுபவித்தவள் என்றவகையில் எமதுமக்களுக்கு நீதியும் சுதந்திரமும் அமைதியும் கிடைக்க எனது அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும் என உறுதிகூறுகிறேன்.

இதேவேளையில் காமினி திஸநாயக்கா கொலை குறித்து பூரணவிசாரணையையும் நாம் மேற்கொள்வோம்.

எனது கணவர் விஜயகுமாரணதுங்கா, ரஞ்சன் விஜயரத்ன, லலித் அத்துலத்முதலி, முன்னாள் ஜனதிபதி பிரேமதாசா ஆகியோரின் கொலைகள் மற்றும் படை அதிகாரிகளான டென்ஸில் கொப்பேகடுவ, கிளான்ஸி பேர்னாண்டோ ஆகியோரின் கொலைச் சம்பவங்கள் மூடிமறைக்கப்பட்டன. ஆனால் அவை குறித்தும் நாம் பூரண விசாரணைகளை மேற்கொள்வோம் என்றார். -க-இ

தமிழீழ நீதிமன்றில்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## இருவருக்கு 20 நாள் சிறை

விபத்துக்குள்ளான மாட்டை மறுநாள் இறைச்சியுடன் கலந்து விற்பதற்காக மாட்டை உரித்துக்கொண்டிருந்த குற்றத்துக்காக இரு இளைஞர்களுக்கு நீதியாளர் தலா இருபது நாட்கள் சிறைத்தண்டனை விதித்தார்.

ஊரெழுவை சேர்ந்த இரு இளைஞர்களும் சுன்னாகத்தில் உள்ள மாட்டு தொழுவம் ஒன்றில் வைத்து இம்மாட்டினை உரித்தபோது சுன்னாகம் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டனராம்.

காவல்துறையினர் மாட்டினை கைப்பற்றியபோது அது பாவனைக்கு உதவாது இருந்ததாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது. [109[

அக்கரைப்பற்றில்

# பொலிஸாரிடையே துப்பாக்கிச் சூடு!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று அஞ்சல் தொலைதொடர்பு நிலையத்தில் நீண்ட நேரமாக துப்பாக்கிச் சத்தம் சரமாரியாக கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்,

தொலைத் தொடர்பு நிலையத்தில் நிலைகொண்டுள்ள பொலிசாருக்குள்ளேயே ஏற்பட்ட மோதல்களின் விளைவே இத்துப்பாக்கிச் சூட்டுச்சத்தமாக இருக்கலாம் என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இச்சத்தம் குறித்தும் பொலிசாரிடையே ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள் குறித்தும் பாதுகாப்பு வட்டாரங்கள் இதுவரையில் எதுவித தகவலையும் வெளியிடவில்லை. க-இ

# ஐ. தே. க. அரசின் காணி மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் 20 கோடி ரூபா பெறுமதியானகாணியை 15 லட்சம் ரூபாவுக்கு ஐ. தே. க. விற்றது குறித்து விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பொதுமக்கள் குடியிருந்த மேற்படி காணியை கடந்த அரசு 1987-ம் ஆண்டு பொறுப்பேற்றதுடன் அதில் குடியிருந்த பொதுமக்களையும் வெளியேற்றுவதற்காக ஐந்து கோடி ரூபாவை செலவு செய்தது.

இதன்பின்பு இக்காணியை வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 15 லட்சம் ரூபாவுக்கு முன்னாள் அரசு விற்றுவிட்டதாம்.

இதுபற்றி அரசுக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். -வி-இ

ஸ்ரீமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளமாட்டார் என்பது தெரிந்ததே.

ஆனால் அவரது இரண்டு புதல்வர்களான நவீன், மயந்த ஆகிய இருவரும் ஐ. தே. க. ஆதரவாளர்களைச் சந்தித்துவருகின்றனர்,

திருமதி திசாநாயக்காவின் பாதுகாப்புக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தீவிரகவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து பொலிசார் தமக்கு எச்சரிக்கை செய்துள்ளனர், இதனை நாம் ஒரு விளையாட்டாக எடுக்கமுடியாது. அவரது பாதுகாப்பு குறித்து நாம் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் திரு. சரத் அமுனுகம மேலும் தெவித்தார், -இ

காமினியின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் படையினரின் சம்பளக கொடுப்பனவுகளுக்கும், யுத்த டாங்கிகள், போர் விமானங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் 530 கோடி ரூபா கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில்அனுமதிக்கப்பட்டதாக நிதி அமைச்சின் செயலர் ஏ, எச். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரும். ஜனதிபதி வேட்டாளருமான காமினிதிஸாநாயக்கா குண்டு வெடிப்பின் மூலம் கொல்லப்பட்டதையடுத்தே பாதுகாப் செலவுகளை அதிகரிப்பதற்கான இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும் திரு. ஜெயவர்தன தெரிவித்தார்,

இதேவேளை பாதுகாப்புச் செலவுகளுக்காக மேலும் 60 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகபாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. -இ

நாடாளுமன்ற

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சிமுறை நீக்கப்பட்டதும், வெஸ்ட்மினிஸ்டர்ஆட்சிமுறை அமுலுக்கு வரும். அப்போது நாட்டின் தலைமைப்பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். சம்பிரதாயபூர்வ ஜனதிபதிப் பதவியே அது. அந்தப் பதவிக்கு அநேகமாக திருமதி பண்டாரநாயக்காவே நியமிக்கப்படலாம்.

பொதுசன ஐக்கியமுன்னணி ஜனதிபதித்தேர்தலில் வெற்றி பெற்றதும் திடீர் பொதுத் தேர்தல்ஒன்றை நடத்தவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் நாடாளுமன்ற ஆட்சிமுறையில் பொதுமுன்னணி நாடாளுமன்றத்தில் அதிகளவுஆசனங்களை பெற்று தனது ஸ்திரத் தன்மையை உறுதிசெய்து கொள்ள வேண்டும் எனவும் திரு. சரவணமுத்து தெரிவித்தார். இ

காணமல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட பல வழக்குகள் அரசியல்வாதிகளின் தலையீடு காணமாக குறிப்பாக 1989-ம் ஆண்டிலிருந்து புதிய அரசாங்கம் பதவியேற்றது வரை நடாத்தி முடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் சட்டத்திற்கு முரணாக கைது செய்தல், தடுத்து வைத்தல், சித்திரவதை செய்தல் என்பன போன்ற குற்றச் செயல்கள் பல பொலிசாருக்கு எதிராக சிங்கள மக்களாலேயே நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

1988ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கள், நீதிபதிகள், புத்திஜீவிகள் ஆகியோர் வன்முறைகளுக்கு இலக்காகினர்.

மேலும் கடந்த ஆட்சிக் காலங்களில் எண்ணிக்கை அதிகரித்தது போல அவர்களின் வருமானமும் அதிகரித்தது. இலங்கையில் 45 சதவீதமான சிறுவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்னையால் 10 ஆயிரம் அநாதைச் சிறுவர்கள் வீதிகளில் அலைகின்றனர். 5 லட்சத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் உரிய வயதிற்கு முன்னர் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

1827 மனித உரிமை மீறல் வழக்குகளில் 930 பொலிசாருக்கு எதிராகவும் 898 அரச ஊழியருக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டதாவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. க-இ